**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-34** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : காளிதாஸ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 17th day of June 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக அயல் பணியாக கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தொலை தொடர்பு (CDR) பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கரூர் நகர காவல் நிலைய குற்ற எண்.1031/2020 என்ற வழக்கில் எதிரிகள் கோகுலகிருஷ்ணன், பிரேம்குமார், காவியா ரமேஷ், மணிகண்டன், கேசவன், கலைச்செல்வன் ஆகியோர்களின் CDR (Call Details Records) காவல் துறை கண்காணிப்பாளர் E-Mail க்கு ஏர்டெல், ஜியோ, ஒடோபோன் ஆகியவற்றில் வந்த மெயிலில் இருந்து கரூர் நகர காவல் நிலைய அலுவலகத்திற்கு அனுப்பி கரூர் மாவட்ட காவல் நிலையத்தில் வைத்து நோடல் ஆபிஸ் அனுப்பிய இமெயில் பிரிண்ட் எடுத்தேன். நான் இமெயிலில் இருந்து எடுத்த CAF Customer Application Form மற்றும் CDR Details பிரிண்ட் எடுத்தது

இதுதான். அவை இரண்டு நபர்களுக்குரிய 2 **CAF Customer Application Form** மற்றும் **CDR Details** அது அ.த.சா.ஆ.56 மற்றும் அ.த.சா.ஆ.57 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து காவல் துறை துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

ஓம்/.K.H.இளவழகன்
மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-33**<br>Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : அஜித்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 17th day of June 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது புலியூர் சிமெண்ட் பேக்டரி குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்னதாக அண்ணா நகர், கரூரில் குடியிருந்து வந்தேன். வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியும். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என்ற விபரம் அவர் இறந்த மறுநாள் எனக்கு தெரியும். என் வீட்டிற்கு முன்பு கிருஷ்ணமூர்த்திக்கும், மற்ற நபருக்கும் தகராறு ஏற்பட்ட விபரம் எனக்கு இறப்பதற்கு ஒருநாள் முன்பு ஏற்பட்டது எனக்கு தெரியும். சாட்சி சிறிது நேரம் கழித்து என் வீட்டிற்கு முன்பு கூட்டமாக இருந்தது, அது சண்டையா என்று தெரியாது என்கிறார். கூட்டாக இருந்த நபர்கள் 7, 8 நபர்கள் ஆவார்கள். அந்த கூட்டத்தில் கிருஷ்ணமூர்த்தியும் இருந்தார். அந்த கூட்டத்தில் கோகுல்,

கலைச்செல்வன், கேசவன், பிரேம் ஆகியோர்கள் இருந்தார்களா என்றால் எனக்கு கோகுலை தெரியும், அவர் என் வீட்டிற்கு எதிர்புறத்தில் குடியிருக்கிறார், சண்டையில் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. (சாட்சி எதிரியை பார்க்காமலேயே எதிரியை தெரியாது என்று சாட்சியம் அளித்தார்.)

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

17.09.2020 அன்று காவல் துறையினர் என்னை விசாரித்தபோது இரவு 8.45 மணியளவில், நீங்கள், பிரேம், கேசவன், கலைச்செல்வன், கோகுல் ஆகியோர்கள் உங்கள் வீட்டிற்கு கீழே இருந்ததாகவும்,அப்போது கோகுலுக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது கிருஷ்ணமூர்த்தி, பிரேம்குமாரை அடித்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி அடித்ததால் பிரேம்குமாருக்கு ரத்தகாயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு உங்களை உங்கள் தாயார் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றும் 18.09.2020 அன்று நீங்கள் காலை 6 மணிக்கு திருப்பூருக்கு வேலைக்கு சென்றுவிட்டதாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 18.09.2020 அன்று கேசவன் என்பவரது செல்போனில் இருந்து உதவி ஆய்வாளர் அழகுராமன் உங்களுக்கு செல்போனில் அழைத்தார் என்றால் சரிதான். 18.09.2020 மாலை நான் கரூருக்கு காவல் ஆய்வாளர் பேசியபிறகு வந்துவிட்டேன். நீங்கள் 17.09.2020 அன்று நடந்த தகராறு பற்றி காவல் துறை விசாரித்தபோது கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரி உங்கள்

நண்பர் என்பதால் அவரை காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.K.H.இளவழகன்
மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-32** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : கவிதா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 17th day of June 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது டெக்ஸ்டைல்ஸ்சில் வேலை செய்து வருகிறேன். தாந்தோணிமலையில் குடியிருக்கிறேன். நான் இரண்டு சிம்கார்டு பயன்படுத்துகிறேன். 9384246805 என்ற சிம்கார்டு என் பெயரில் உள்ளது. அதை நான் பணி உபயோகத்திற்காக பயன்படுத்தி வருகிறேன். 9361862754 என்ற போனை வீட்டு உபயோகத்திற்காக பயன்படுத்துகிறேன். 9384246805 என்ற சிம்கார்டு நான் தற்போதிலிருந்து 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக அதனை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டேன். எனக்கு பிரேம்குமார் என்ற நபரை தெரியாது. உங்கள் காவல் துறையினர் விசாரித்தபோது சிம்கார்டை பிரேம்குமாருக்கு கொடுத்திருப்பாக கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

9384246805 என்ற சிம்கார்டு உங்களுடைய ஆதார் அடையாள அட்டையை கொடுத்து ஏர்டெல் நிறுவனத்திடம் இருந்து பெற்ற மேற்சொன்ன சிம்கார்டை உங்கள் வீட்டில் குடியிருக்கும் பிரேம்குமார் என்பவருக்கு நீங்கள் அவர் பயன்படுத்துவதற்காக மேற்சொன்ன சிம்கார்டு எண்ணை அவருக்கு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் குற்றவியல் நடுவர் எண்.1 ல் இதற்கு முன்னதாக சாட்சியம் அளித்துள்ளீர்களா என்றால் நான் சாட்சியம் அளித்துள்ளேன். 164 கு.வி.விசாரணையில் குற்றவியல் நடுவர் எண்.1 ல் என்னை விசாரித்தபோது நான் கையொப்பம் போட்டது இதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.55 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன நீதிமன்றத்தில் பிரேம்குமாருக்கு உள்ளூர் விலாசத்தில் ஆவணம் எதுவும் இல்லாததால் உங்களுடைய ஆதார் அடையாள அட்டையை வைத்து அவருக்கு 9384246805 என்ற சிம்கார்டு வாங்கி கொடுத்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றும், தற்போது எதிரியிடம் ராசியாக போனதால் பிரேம்குமாருக்கு சிம்கார்டு எண் தரவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

ஒம்/.K.H.இளவழகன்

மாவட்ட நீதிபதி,

கரூர்.